# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை),
# தருமபுரி

ந.க.எண். 095/2019/சி1 நாள். 29.04.2020

## சுற்றறிக்கை -2 (கோவிட் -19)

பொருள் : கோவிட் -19 (Covid - 19) கொரோனா நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை - விவசாய நகைக்கடன்களை கேசிசி கடன்களாக மாற்றம் செய்வதற்கான காலக்கெடுவினை 31.05.2020 வரை நீட்டிப்பு செய்து வழங்குதல் மற்றும் குறுகிய காலப் பயிர் கடன்களின் தவணையினை 31.05.2020-க்குள் திருப்பிச் செலுத்துதல் - பதிவாளர் அறிவுரைகளை தொடர்புறுத்துதல் - தொடர்பாக.

பார்வை : 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க. 3039/2020/மவகொ.1 நாள். 17.04.2020.

2. வங்கியின் சுற்றறிக்கை ந.க.எண்.131/2012 NPA CELL நாள்.04.04.2020 (சுற்றறிக்கை -1 கோவிட் -19).

*******

கோவிட் -19 (Covid - 19) கொரோனா நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால் பார்வை 1-ல் கண்டுள்ள பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட அறிவுரைகளை வழுவாது பின்பற்றிட அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் தொடர்புறுத்தப்படுகிறது.

1. மத்திய அரசு வழங்கும் வட்டி மானியத்தினை பெறுவதற்கு விவசாய நகைக்கடன்கள் மற்றும் குறுகிய காலப் பயிர்க்கடன்களை KCC கணக்குகளாக மாற்றம் செய்வதற்கான காலக்கெடு 31.05.2020 ஆம் தேதிவரை நீட்டிப்பு செய்யப்படுகிறது. மேற்படி கடன்களுக்கு 31.05.2020ஆம் தேதி வரை மத்திய அரசு வழங்கும் வட்டி மானியம் மற்றும் உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு வழங்கப்படும் வட்டி ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2. கடன் தொகை ரூ.3.00 இலட்சம் வரையில் 7% வட்டியில் வழங்கப்பட்டுள்ள பயிர்க்கடன்களில் 01.03.2020-ஆம் தேதி முதல் 31.05.2020 ஆம் தேதிவரை தவணை ஏற்படும் கடன்களுக்கு. மத்திய அரசு வழங்கும் 2% வட்டி மானியம் மற்றும் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வழங்கப்படும் 3% வட்டி ஊக்கத்தொகை ஆகியவை 31.05.2020 ஆம் தேதிவரை அல்லது கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தும் தேதி இதில் எது முந்தையதோ அந்த தேதி வரை மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

....2..

மேற்கண்ட அறிவுரைகளைக் கவனத்தில் கொண்டு செயல்படுமாறு அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சங்கங்கள் செயல்படுத்துவதை கண்காணித்திடுமாறு அனைத்து சரக மேற்பார்வையாளர்கள் மற்றும் கள மேலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் வழங்கி ஒப்புதல் பெற்று தலைமையகத்தில் சமர்ப்பிக்க அனைத்து கள மேலாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- கி. ரேணுகா
இணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர்

இணைப்பு :-
பதிவாளர் கடிதம் மற்றும் உடன் இணைத்து வரப்பெற்ற நபார்டு கடிதங்கள்

பெறுநர் :-
1. அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் / இதர சங்கங்கள் - கள மேலாளர்கள் வழியாக
2. அனைத்து கள மேலாளர்கள்.
3. அனைத்து கிளை மேலாளர்கள்.

நகல் :-
1. தலைமையக அனைத்து பிரிவு மேலாளர்கள் - அவரவர் தொடர்புடைய பணிகளுக்காக
2. உட்பரிசோதகர்கள், தருமபுரி/ கிருஷ்ணகிரி
3. ஆய்வுக்குழு, தலைமையகம்
4. துணை இயக்குநர், கூட்டுறவு தணிக்கை துறை, தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி
5. உதவி இயக்குநர், கூட்டுறவு தணிக்கை துறை, அப்பாவு நகர், தருமபுரி.
6. சரக துணைப்பதிவாளர், தருமபுரி/கிருஷ்ணகிரி/ஓசூர்.
7. மண்டல இணைப்பதிவாளர், தருமபுரி/கிருஷ்ணகிரி
8. தலைவர், இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், பொது மேலாளர், முதன்மை வருவாய் அலுவலர் அவர்களின் மேசைக்கு.

/உண்மை நகல் / மேலாளர் (விவ.கடன்)